# விடியல்

## The Dawn

இதழ்-84, ஏப்ரல் 2016

**கௌரவ ஆசிரியர்**

முனைவர்வே.இராதாகிருஷ்ணன்

கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

முனைவர் சி.ரா.சுரேஸ்

துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

முனைவர் ம.லோகேஸ்வரன்

**ஆசிரியர் குழு**

திரு.வீ.முருகானந்தம்

முனைவர் த.கண்ணன்

திருமதி .சு.சாந்தி

திரு.ப.ராஜேஷ்

முனைவர் து.சரஸ்வதி

முனைவர் பா.ராஜேஷ்

முனைவர் கோ.இரவிச்சந்திரன்

முனைவர் ந.சங்கீதா

திரு.செ.தங்கராஜ்

திரு.மு.சதீஸ்குமார்

முனைவர் சு.முப்பிடாதி

முனைவர்ப.பிரதிபா

திரு.சத்தியராஜ்

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:

**தமிழ்த்துறை,**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**

**திருச்செங்கோடு—637215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal

**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com

**Website:** ksrcas.edu

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.

# தலையங்கம்

மே 16 தமிழகத்தின் தலையெழுத்தை கருப்பு மையால் தீர்மானிக்கப் போகிற நாள்.ஆகையால் ஏப்ரல் மாதம் ஒலிபெருக்கிகளின் கூவல்களால் நிரம்பி வழிகின்றது. கொஞ்ச காலத்திற்கு முன்பு வரையில் பிரச்சாரங்கள் என்றால் அனல் பறக்கும் என்பார்கள். கூட்டம் கூட்டமாக மக்கள் புறப்படுவார்கள். கிட்டத்தட்ட ஒரு திருவிழாதான். ஆனால் இன்று மிக

வலுக்கட்டாமாகக் கூட்டங்கள்

கூட்டப்படுகின்றன.. தலைக்கு

இவ்வளவு என்று பேரம்

பேசிக்கொள்கிறார்கள்.

பிரியாணியும், மதுவும் தான் இன்றைய சாமானியனுக்குத் தேவையா? இந்த இரண்டிற்காகத் தனது சுயமரியாதையை இழந்து நிற்க வேண்டுமா? நம்மைக் காப்பாற்ற புது அவதார புருஷன் வரப்போவதில்லை. ஆனால் நம் கையில் தான் இருக்கிறது ஒரு நல்ல மனிதரை நாட்டை ஆளச் செய்வதற்கு.. வாக்குரிமை மீது இன்று பலருக்கும் அக்கறையில்லை. என்னத்த ஓட்டு போட்டோம்? என்கிற நிலையில் பலர் இருக்கின்றனர். முதலில் இந்த நிலை மாற வேண்டும். நான் கண்டிப்பாக

பல இன்னல்கள் வந்தாலும் ஒட்டுரிமையைப் பயன்படுத்துவேன் என்கிற உறுதிமொழியை மனதளவில் கொள்ள வேண்டும்.

பின்னர் சிறந்த தலைமையைத் தெரிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு முறையும் வாக்களிப்பவர்களின் எண்ணிக்கை கூடி வேண்டுஆம ஒழிய குறையக் கூடாது. ஆகவே முதலில் வாக்களிப்போம் என்கிற உறுதிமொழியை ஏற்க வேண்டும்.

பணம், சாதி, சிந்தனையின்றி வாக்களித்தல் என்று இம்மூன்று நிலைகளில் வாக்களித்தலை அடியோடு முறிக்க வேண்டும். ஜனநாயகம் என்றால் இம்மூன்றிற்கும் இடமில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த சில ஆட்சிக் காலங்களில் இலவசங்கள் தான் முன்னிறுததப் படுகின்றன. மக்களும் அதைத்தான் எதிர்பார்க்கின்றனர் போலும். அரசு இலவசங்களை நிறுத்திக் கொண்டு அடிப்படை பிரச்சனைகளையும் அதற்கான மாற்று ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தாலே போதும்.

இந்தத் தேர்தலில் ஆளுக்காளாய் பூரண மதுவிலக்கினைக் கையில் எடுத்துள்ளனர். யார் வந்தாலும் சரி மதுவிலக்கு என்பது தமிழ்நாட்டின் அமல் படுத்த முடியாத சட்டமாக

இருந்து வருகின்றது. அதனை உடைத்தெறிய முன்வர வேண்டும். மதுவினை நிறுத்தினால் போதும் சாமானியனும் சாதனை படைத்து நிமிர்ந்து நிற்பான். தயவுசெய்து அவன் முதுகெலும்பை உடைக்காது பாதுகாக்கின்ற அரசாக வாருங்கள். தமிழ்நாடு பல சரித்திரங்களைத் தன்னுள் கொண்டது. அதன் பெருமையை உலகறியச் செய்ய வேண்டும். அது ஒரு நல்ல அரசால் தான் முடியும்..

வாருங்கள் ஊர் கூடி இழுப்போம்…

**----- பயணக் கட்டுரை -----**

## கல்விச் சுற்றுலா

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு படித்துக் கொண்டிருக்கிறேன் நா.சரண்யா என்பது எனது பெயர். எங்கள் தமிழ்த்துறை ஏற்பாடு செய்திருந்த அமர்க்களமான கல்விச் சுற்றுலாவைப் பற்றி ஒரு பயணக் கட்டுரையாக வடிவமைக்கின்றேன். கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பாக கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆம் இரண்டு நாட்கள்(25,26-03-2016) கேரள மாநிலத்தை நோக்கி 24-03-2016 இரவு 10.30 மணியளவில்,

குதூகலமான சுற்றுலா

குத்தாட்டங்களுடன் தொடங்கி
கோலாகல கலை விழாவாக
கண்களுக்கு விருந்தாக
அறிவுக்கு விசாலமாக
நாளைய இதிகாசங்களாகும்
இளைய தலைமுறையின்
பயணம்..

வீறுகொண்டு
விரைந்து கொண்டிருந்தது
சுற்றுலா பேருந்து...

உயர்ந்த மலைகளும்
தாழ்ந்த பள்ளங்களும் நிறைந்த
மலையாள மண்ணில்
கால்பதித்ததும்
கைக்கிளைகளால் எங்களை
கைகுலுக்கி வரவேற்றன
பேருந்து சன்னலோர மரங்கள்..

## 25ஆம் தேதி

கதிரவனும் தன் கடமையைச் செய்யப் புறப்படும் புத்தம் புதுக் காலையில் பக்தி பரவசமாக சோட்டாணிக்கரை அம்மனையும் திருமாலையும்
தரிசிக்க புறப்பட்டோம்.

பிரமாண்டமாக அமைந்திருந்த அக்கோவிலில் சுற்றுப்பிரகாரத்தை வலம் வந்தோம். அங்கிருந்த கிணறு ஒன்றில் காணிக்கையாகச் சில்லறைக் காசுகள்
வீசப்பட்டிருந்தன. அங்கு மூலவராக இருந்த அனுமனுக்கு நெய் தீபங்கள் ஏற்றப்பட்டிருந்தன. இக்கோவிலில் பேய் ஓட்டப்படுவது விசேசம் என்றார்கள் மூலவரைத் தரிசிக்க ஆண்கள் மேற்சட்டை அணியக்கூடாது பெண்கள் புடவை அணிந்திருக்க வேண்டும் என்றார்கள். ஆனால் இதற்கு மாறாகப் பெரும்பாலானோரைக் கண்டோம். உள்ளுக்குள் செல்ல

முடியாததால் முழு விவரங்களை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆகையால் வெளிப்பிரகாரத்தை மட்டும் சுற்றிக்கொண்டிருந்தோம்.

அங்கு மண்விளக்குகள் அமைப்பில் இருந்த முரங்களில் நெல் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது இது தமிழரின் பண்பாட்டு எச்சம் என்று எங்கள் பேராசிரியர் கூறக் கேட்டுக் கொண்டே நகர்ந்தோம். இக்கோவிலின் மேற்கூரை அற்புதமாக அமைந்திருந்தது. விட்டத்தில் வண்ணக் காகிதங்கள் ஒட்டப்பட்டிருந்தன. அது என்னவோ தெரியவில்லை நான் பார்த்த சிறு குழந்தைகளும் சரி, பாட்டிமார்களும் சரி கண்மையிட்டு அழகுடன் காட்சியளித்தனர்.

கேரளப்பெண்கள் என்றாலே வெளிர்சந்தன புடவைதான் சிறப்பு. அப்படித்தான் பெண்கள் அழகுற நின்றனர்.எண்ட மகளே, பெண்டு, நோக்கி என்கிற வார்த்தைகளைப் போகிற போக்கில் என்னால் கவனிக்க முடிந்தது. கேரள மக்கள் தலைக்கவசம் அணியும் சட்டத்தை தீவரமாகக் கடைபிடிக்கின்றனர் போலும். பெரும்பாலும் அப்படித்தான் சாலையில் மக்களைப் பார்த்தோம்.மகிழ்ச்சி.

அங்கிருந்து 12 மணியளவில் புறப்பட்ட சுற்றுலாப் பேருந்து 1 மணியளவில் ஹில் பேலசுக்கு வந்தடைந்தது. அங்கிருந்த ராமவர்மன் அரண்மனைக்குள் நுழைந்தோம். அங்கு மரத்தாலான

மாடிப்படிகள், கதவு, சன்னல்கள், அரசர்கள் அமரும் ஷோபா, செய்திகள் அறிவிக்கும் நிறுத்துப் பலகையும் அதன் கால்களில் 4 முக சிங்க உருவங்களும் அழகுற காட்சியமைக்கப்பட்டிருந்தன.

தாழ்ப்பாளின் கலை வடிவம், பீங்கான் சிற்பங்கள், மார்பில்ஸ் குடுவைகள், சைனீஸ் ஜாடிகள், கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள், வாள் உறைகள், தங்கத்தகடு வார்க்கப்பட்ட வலம்புரிச் சங்குகள், அணிகலன்கள், தலைக்கிரீடங்கள், காதணிகள், காசுமாலைகள், நீண்ட ஒட்டியாணம்,தோற்பட்டை

அணிகலன்கள்

ஓலைச்சுவடிகள்,பொற்காசுகள்,தந்தங்களுடனான யானை உருவம், வலது கையால் தலைதாங்கி படுத்திருக்கும் கலைநயமிக்க புத்தர் சிலை என்று 700 ஆண்டுகள் பழமைமிக்க இந்த ராமவர்மன் பேலஜ் கேரள மாநிலத்தின் பொக்கிஷம் என்றே கூறலாம். அதைவிட முக்கியமானது ஒரு பாரம்பரியமிக்க கண்காட்சி இடத்தை அரசு மிகக் கவனமாக மக்களுக்கு எடுத்துரைக்கின்றது.

ராமவர்மன் சமாதி என்ற கருதுகிறேன் ஒரு அழகான அமைதியான சமாதி இருந்தது அதில் date of birth – 01.01.1052 எனக் குறிப்பிட்டிருந்தது.விண்ணை முட்டும் அளவிற்கு மரங்கள் பெரிது பெரிதாவிருந்தன. டைனேசர் உருவம் ஒன்றும் பெரிதாக நின்று

கொண்டிருந்தது. அந்தப் பகுதிக்கு இடது பக்கம் வந்தால் மான்கள் வசிப்பிடம். ஆஹா அருமையான இடம். மான்களுக்கு எங்கள் கைகளால் இலைகளை எடுத்துக் கொடுத்தோம். அது என்னவோ புதிதுதானே. மான்களை வகுப்பில் சங்க இலக்கியமாக படித்ததுண்டு. நேரில் அதுவும் மிக அருகில் அதுவும் ஏராளமான மான்களைப் பார்ப்பது என்னவோ எனக்கு வித்தியாசமான உணர்வாக இருந்தது. மான்கள் ஒலியெழுப்பிய விதம் அழகு அழகு அழகு.. ஆனால் கொஞ்சம் நாற்றமும் இருந்தது....

மேலும் அதற்குள் ஒரு குகை இருந்தது. உள்ளே நுழைவவதற்குப் பயமாகத்தான் இருந்தது. இருந்தாலும் பேராசிரியர்கள் துணையுடன் நுழைந்தால் உள்ளே ஒன்றுமில்லை. இப்படிப் போய் அப்படி வந்துவிட்டோம்.. பயத்துடனான ஏமாற்றம்.

பின்னர் பேருந்து இறக்கிவிட்ட இடத்திற்கே வந்தோம். அங்கு ஒரு குழந்தைகளுக்கான பார்க் ஒன்று இருந்தது. அங்கே எங்களது மதிய உணவை முடித்துக் கொண்டு புகைப்படங்களைப் பற்றிய பேச்சுகளைத் தொடர்ந்து செராய் கடற்கரையை நோக்கிப் புறப்பட்டோம்...

பேருந்துதான் மாணவர்களின் கலையரங்கம். ஆட்டம் கொண்டாட்டம்தான். சரியாக 3 மணியளவில் கடற்கரைக்காற்றும் மீன் வாடையும் எங்களை

வரவேற்றது. ஆம் செராய் கடற்கரையை வந்துவிட்டோம். களத்தில் குதித்துவிட்டனர். எங்கள் அருகில் மூன்று கால் நாய் ஒன்று தனது வாழ்க்கைய பரபரப்பான மக்கள் மத்தியில் அமைதியாக நகர்த்திக்கொண்டிருந்தது. மூன்று கால் நாய் மனித மனத்தின் தன்னம்பிக்கை என்று ஏதேதொ தோன்றியது.. அது இருக்கட்டும் இந்தப் பக்கம் எங்கள் நண்பர்கள் கடலின் விளிம்பில் நின்று கொண்டு வானளாவிய சந்தோசத்துடன் விளையாண்டு கொண்டிருந்தனர். நண்பர் ஒருவரின் செருப்பை யாரோ தூக்கிவிட்டதாகப் பேச்சு.. ஆனால் அதற்குப் பதிலாக வேறொரு செருப்பை நண்பர் எடுத்துக் கொண்டு வந்துவிட்டதாகவும் பேச்சு.. என்ன நடந்தது என்று தெரியவில்லை. கடலலைகள் மண்ணுடன் வந்து முகத்தைக் கழுவியதால் மீண்டும் நன்நீரில் குளிக்க வேண்டியதாயிற்று. எல்லாம் முடித்தவுடன் பேருந்து கிளம்பியது லூலூ (LULU Mall) மாலினை நோக்கி..

அடடா லூலூ மால் எவ்ளோ பெரிய கடை. ஆம் எஸ்கலேட்டரில் கால் பதித்து பொருள் வாங்கிய நாள். இவ்வளவு விலைக்குபொருட்கள் இருக்கின்றனவா என்று அன்று தான் எனக்குத் தெரியும். அதைவிட இவ்வளவு விலை கொடுத்துப் பொருட்கள் வாங்க மனிதர்கள் ஏராளம் உள்ளனரே என்பதும் அன்று தான் எனக்குத் தெரிந்தது. வேடிக்கையுடன் நிறுத்திக்கொண்டு

புறப்பட்டோம். அன்றிரவு அசைவ உணவு எனது ஆசிரியருடன் உண்டு பேருந்தில் அமர்ந்தோம். முதல் நாள் சுற்றுலாப் பயணம் நிறைவுற்றது. பேராசிரியர்கள் எங்களுக்காக மிகவும் பாதுகாப்பான அறைகளை ஏற்பாடு செய்திருந்தனர். நவீனமயமான அறைகள்.. நாங்கள இருந்த அறைகளே ஒரு சுற்றுலாத் தளம் தான். சுற்றிய களைப்பில் தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கிவிட்டு கண்ணயர்ந்தோம். திடீரென காலிங் பெல் அடித்தது நால்வரும் திடுக்கிட்டு எழுந்தோம். எனது வகுப்பாசிரியர் ம்ம்ம் வேகமாகக் கிளம்புங்கள் இன்றைக்கு அதிரப்பள்ளி அருவிக்குப் போறோம்... என்று கூறிக்கொண்டிருந்தார். தூக்கம் களைந்தும் களையாமலும் எழுந்து கொண்டிருந்தோம். 6 மணிக்குள்ளாக கிளம்பி அதிர அதிர

அதிரப்பள்ளியை நோக்கிப்

புறப்பட்டது எங்கள் பேருந்து..

**26** ஆம் நாள்**..**

புத்தம் புதுக்காலை வெயில்

மெதுவாக ஒளிபரப்பிக்

கொண்டிருந்தது. உயரமான

மலைப்பகுதியில் ஊர்ந்து

கொண்டிருந்தது பேருந்து..

அடடா அருமையான காட்சிகள்..

சமுத்திரங்களின் கரைகளிலும்

சமயக் கோயில்களின்

வாசல்களையும்

கோபுரம் போல் உயர்ந்த

மலைகளையும்

தோப்புகளையும்

வனாந்திரங்களின் ஊடேயும்
இலகுவாக நுழைந்து
இன்னிசை கானங்கள் ஒலிக்க
இனிதே பயணம் தொடர்ந்தது.

வியப்பான செய்திகளும்
விந்தையான இயற்கை வனப்பும்
இறைவன் படைப்பில்
இனிதே அமைந்திருந்தன..

கோயில்களின் கல்லறைகளிலும்
கல்வெட்டுகளின் எழுத்துகளிலும்
வரலாற்றின் பக்கங்களை
விவரிக்க முடிந்தது..

எங்கு நோக்கினும்
நீர்வளம், பசுமையின் ஆதிக்கம்..

சர்ச்சுகளின் கோபுரங்கள்
சைனாவைக் கண்முன் கொணர்ந்து வந்த
அடுக்குமாடிக் கட்டிடங்கள்..

அடர்ந்த காட்டின் நடுவே
ஓட்டு வீடுகள்
வீட்டு வாசலில் விரைந்தோடும்
ஆறுகள்..

சன்னல் வழி எங்கள் முகம் தடவி
கூந்தலைக் களைத்து விளையாடும்
தென்றல் காற்று..

இனம் புரியாத
இனிமையைத் தந்தது
சன்னலோரப் பேருந்துப் பயணம்..

அதிரப்பள்ளியை அடைந்தோம்..

சன்னல் கண்ணாடிகளை
அடைத்துவிடுங்கள்
குரங்குகள் அதிகமாம்
என்று ஆசிரியரின் அறிவுறுத்தலில்
கவனத்துடன் இறங்கினோம்..

புகை மண்டலமாய்
ஒலியெழுப்பிக் கொண்டிருந்தது
அதிரப்பள்ளி அருவி..

எங்கிருந்தோ வந்த அருவி

எங்களை மகிழ்வித்துச் செல்கிறது

எங்கள் ஆசிரியர்களைப் போல..

குளிர்ந்தோடும் குதூகலமான

அருவியில் புனலாடி

புகைப்படங்களாய் எங்கள்

நெஞ்சார்ந்த நினைவுகளைப்

பதிவாக்கி

பிரிய மனமின்றி பிரியும்

மூன்றாமாண்டு மாணவர்களைப்

போல

அதிரப்பள்ளிவிட்டுப் பிரியத்

துவங்கினோம்..

அங்கிருந்து 11.30 மணியளவில்

பேருந்து விரையத் துவங்கியது

விலங்குகள் சரணாலயத்தை நோக்கி.

சுதந்திர மனிதனின்

எதிர்காலத்தைக் கணிக்கும்

அடிமைக் கிளிகள்..

தேசியப் பறவையும்

தேசிய விலங்கும்

கூண்டுக்குள் கைதிகளாய்..

என்ன உணர்வைப் பிரதிபலிப்பது

தெரியாமலே நானும் ரசிக்கத்

துவங்கிவிட்டேன்..

காட்டு ராஜாவே சிறைவாசம்

அனுபவிக்கும் போது

சாதாரண விலங்குகள் என்ன

செய்யும்?

பன்றிமான், பறவைகள், நீர்யானை, அசோக மரங்கள், சிறுத்தை, குரங்குகள், சிங்கம், புலி, முதலை, மான்கள் தடாகம்,வெள்ளைப் புலியொன்று மல்லாந்து படுத்து விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த காட்சி ஆசம் ஆசம்.. படைநடுங்கும் ராஜ நாகங்கள், சாரைப்பாம்புகள்,மண்ணுளிப் பாம்புகள், ஆமைகள்,

வெள்ளெலிகள், மேலை நாட்டு மாடுகள், ஓக் மரங்கள், ஈமு கோழிகள் பெரும்பாலான அஃறிணைகளை வரிசைப்படுத்திப் பார்த்துவிட்டோம்.

இயற்கையில் இவைகள்
இருந்தால் அது இயற்கைக் காட்சி
அதுவே கூண்டுக்குள்
இருக்கும் பொழுது
கண்காட்சியாக மாறுகிறது...

என்ன வாழ்க்கையோ...

சரி நாம் அடுத்து மழபுழா அணைக்கட்டுக்குச் செல்வோம். பேருந்து புறப்பட்டது. கிட்டத்தட்ட இரண்டாம் நாள் சுற்றுப்பயணம் நிறைவுற்றது..

இறுதிச்சுற்று மழபுழா..

நாங்கள் மழபுழா டேமை அடையும் பொழுது சூரியனும் மேல்வானத்தை அடைந்து விட்டது. புகைப்படங்களுக்கு வாய்ப்பின்றி போனது.. சிலர் மட்டுமே டேமில் ஏறினோம் என்றார்கள். நான் அணைக்கட்டைப் பார்க்கமுடியாமல் போனது.. வருத்தத்துடன் அங்கிருந்த தொங்கு பாலத்தில் விளையாண்டுவிட்டு அங்கிருந்த பூங்காவில் சற்று இளைப்பாறினோம். வெளியில் வந்து அங்கிருந்த கடைகளில் பொம்மைகளை வாங்கிப் பயணப் பைக்குள் திணித்துக் கொண்டோம்..

ஏதோ ஒரு வெறுமை தொற்றிக் கொண்டது. சுற்றுலா முடிந்தது என்றார்கள். அவ்ளோ தானா என்றிருந்தது.. பேருந்து தான் தொடங்கிய இடத்தை நோக்கிச்

சென்று கொண்டிருந்தது. இருந்தாலும் மாணவர்கள் ஆட்டத்தை நிறுத்தவில்லை. குத்தாட்டங்களுடன் பேருந்து குலுங்கி குலுங்கி அதிகாலை 3 மணியளவில் கல்லூரியின் வாசலை வந்தடைந்தது..

இரவும் பகலும் இனிதினிதாய் கழிந்தன இன்றுடன் எல்லாம் முடிந்ததோ என்ற ஏக்கத்துடன் சுற்றலாவிற்கு ஏற்பாடு செய்து எங்களை மகிழ்வித்த எம் பேராசிரியர்களுக்கு நன்றி சொல்லி தனித்தனியாக பிரிகின்றோம்..

மீண்டும் அடுத்த வருடம்
பசுமையான நினைவுகளைத்
தாங்குவதற்காக
காத்திருக்கிறோம்..!

-----

## ஒன்றாய் சேர்வோம்

விழுந்து விழுந்து எழுந்த
உனக்கு
மதியைக் கெடுக்கும் மதுவும்
எதற்கு?
புன்னகை குணம் உனக்கு இருக்கு
புகைக்கும் குணம் உனக்கு எதற்கு?
பண்பாய் வாழும் மனம் இருக்க
பான்பராக் மகனே
உனக்கெதற்கு?
அனைத்தும் ஊரில் அதிகமாய்
இருக்கு
அவைகள் மீது ஆசை எதற்கு?
அன்றாடம் கற்றிட ஆயிரம் இருக்கு
அவைகளைக் கற்றிடு ஆனந்தம்
பெற்றிடு

ம.சூர்யா

கணிதம், இரண்டாமாண்டு

## அம்மா..!

ஒரு நாள் கூலிக்கு

நீ போகாட்டி

மறுநாள் பள்ளிக்கு

என்னால் போகமுடியாது..

கல் மண் சுமந்து நீ

உழைக்காட்டி

பாடப் புத்தகத்தை

என்னால் சுமக்க முடியாது..

கஞ்சித் தண்ணிய நீ குடிச்சு

எனக்குச் சோறை வடிச்சுப்

போட்டவளே

என் கையிலே பரிசுக் கோப்பையுடன்

நிற்கிறேன்

நீ இன்னும் கஞ்சிக் கோப்பையுடன்

தான் நிற்கிறாய்..

எனக்காக எல்லாம் எனக்காக..

என் பிள்ளையாவது

படிக்கட்டும்னு

கஷ்டப்பட்டுப் படிக்க வச்ச

எனக்கு ஒரேயொரு ஆசை

மட்டும்

காச்சுப்போன என் கைக்கு

மருத்துவம் படிச்சு

மருந்து போடனும்..

கவர்மெண்ட் வேலையில

நான் உக்கார வேணுமின்னு

கனவா கண்டு வந்த

நிறைவேத்தி நிக்கிறேன்

ஏனம்மா எழ மறுக்கிறாய்..?

கருவறைக் குழந்தை

அழைக்கிறேன்

கல்லறையைவிட்டு எழுந்து வா..

**பா.தேவி**

**தமிழிலக்கியம் முதலாமாண்டு**

## சமத்துவப் பொங்கல்

யார் சொன்னது?

பொங்கல்விழா இந்துக்களின்

பண்டிகை என்று..

எங்கள் கல்லூரிப் பொங்கல்

ஒரு சமத்துவப் பொங்கல்

சொல்கிறேன் கேளுங்கள்

நான் கொண்டு வந்த

பானையின் நிறம் காவி

அதில் என் இஸ்லாமிய தோழி

பொங்கல வைத்து எழுந்த நுரையோ

இஸ்லாமிய தொப்பி நிறம்

வெள்ளை..

குறுக்கே வைத்த கரும்பின்

தோற்றம்

கிறித்தவ தோழியின்

சிலுவையைக் காட்டியது

நாங்கள் வேறு வேறு சமயத்தவர்

என்பது

மற்றவர்களுக்குத் தான்

எங்களுக்கு நாங்கள்

எப்பொழுதும்

சமத்துவச் சகோதரிகள் தான்..

**ச.ரம்யா**

**தமிழிலக்கியம், முதலாமாண்டு**

## என் உயிர் எங்கே?

பத்து மாதம் உன் உயிருக்குள்

என் உயிசை சுமந்தாய்

புரண்டு படுத்தால்

என் உருவம்

உருக்குலையுமென்று

புரளாமல் அரண் அமைத்தாய்..

நாட்கள் சக்கரமாய் உருள

நான் மடியில் சேயாய் புரள

முள் என்று முகம் சுளிக்காமல்

முதல் பூ என

அறிமுகம் செய்தாய்

இப்பூவுலகிற்கு..

கண்ணின் கருமணியாய்

காத்து வந்தாய்

எனக்கு

முதல் உறவாய்

முதல் குருவாய்

முதல் இறைவியாய்

முத்தமிட்டுக் காட்சி தந்தாய்..

அகரம் அறிமுகமான நாளில்

அன்பு என்னும் அகராதியானாய்..

பாசம் என்னும் மழையைப் பொழிந்து

கண்ணீரால் அலங்கரித்து

அழகிய சிற்பமாக்கினாய்..

பத்திய உணவைப் பாதி வயிறுண்டு

என்னைப் பத்திரமாத்து

தங்கமாக்கினாய்..

அத்தனையும் செய்துவிட்டு

உன் நிழற்படத்தை வைத்து

நிஜத்தைத் தேடும்

கிறுக்கியாக்கினாய்..!

ம.ரஞ்சிதா

தமிழிலக்கியம் முதலாமாண்டு

---- வரலாற்றுச் சுவடு ---

## ராஜீவ் காந்தி

பதினெட்டு வயதான அனைவருக்கும் இந்தியத் திருநாட்டில் வாக்களிக்கும் உரிமையைக் கொண்டு வந்தவர் ராஜீவ் காந்தி.

இவர் 1944 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் நாள் பிறந்தார். தந்தையின் பெயர் ஃபெரோஸ் காந்தி. தாயார் பெயர் இந்திரா காந்தி. தனது பள்ளிப்படிப்பை வெல்காம் பள்ளியில் தொடங்கிய ராஜீவ் காந்தி 1956 ஆம் ஆண்டு டேராடூனில் உள்ள உலகப் புகழ்பெற்ற டூன் பள்ளியில் மேற்கொண்டார். பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச்

சேர்ந்த ட்டிரினிட்டி கல்லூரியில் மெக்கானிகல் என்ஜினியரிங்
படித்தார்.

1968 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் நாள் சோனியாவைத் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு1970 ஆம் ஆண்டு ராகுல்காந்தி என்ற மகனும் 1972 ஆம் ஆண்டு பிரியங்கா என்ற மகளும் பிறந்தனர்.

1980 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 23 ஆம் நாள் விமானப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது ராஜீவ் காந்தியின் தம்பி சஞ்சய் காந்திமரணமடைந்தார். இதனால் அரசியலில் தன் தாயாருக்குத் துணையாக 1981 ஆம் ஆண்டு அரசியலில் இறங்கினார். அதே ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் செயற்குழு உறுப்பினரானார். அமேதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.

1884 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் நாள் இந்திரா காந்தி தன்னுடைய மெய்க்காப்பாளர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதன் பின் ராஜீவ்காந்தி பாரதப் பிரதமராகப் பதவியேற்றார்.

1984 ஆம் ஆண்டு சார்க் நாடுகளின் உடன்படிக்கை
கையெழுத்தாவதற்குக் காரணமா இருந்தார்.

அரசியல் சட்டத்தின் 64 ஆவது பிரிவில் திருத்தம் கொண்டு வந்து பஞ்சாயத்து ராஜ் சட்டத்தைக் கொண்டுவந்தார்.

24.6.1985 ஆம் நாள் ராஜீவ் – லோங்கோ ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால் பஞ்சாபில் தீவிரவாதம் ஒழிந்தது.

1986 ஆம் ஆண்டு ஜிம்பாப்வேயில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் நாள் பெங்களூரில் நடைபெற்ற சார்க் நாடுகள் அமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1991 ஆம் ஆண்டு இவரது சேவையைப் பாராட்டி பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. அவ்விருதினை சோனியா காந்தி பெற்றுக்கொண்டார்.

**வே.மாலினி**

**கணிதம், முதலாமாண்டு**

## தமிழ்நாட்டின் முதன்மைகள்

✓நோபல் பரிச பெற்ற முதல் தமிழர் – சர்.சி.வி.ராமன் (1930)

✓இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த தமிழர் – இராஜாஜி

✓பாரத ரத்னா விருது பெற்ற முதல் முதலமைச்சர் – இராஜாஜி

✓தமிழகத்தின் முதல் முதலமைச்சர் – சுப்புராலு செட்டியார்(1920-21)

✓தமிழகத்தின் முதல் பெண் முதலமைச்சர் – ஜானகி ராமச்சந்திரன்

✓தமிழகத்தின் முதல் பெண் ஆளுநர் – பாத்திமா பீவி (1997-2001)

✓தமிழகத்தின், இந்தியாவின் முதல் மாநகராட்சி – சென்னை (1688)

✓சென்னை மாநகராட்சியின் முதல் தலைவர் – சர்.பி.டி.தியாகராசர்

✓சென்னை மாநகராட்சியின் முதல் மேயர் – சர்.ராஜா முத்தையா செட்டியார்

✓சென்னை மாநகராட்சியின் முதல் பெண் மேயர் – தாரா செரியன்

✓ஞான பீட விருது வாங்கிய முதல் தமிழ் எழுத்தாளர் –அகிலன் (1975)

✓சாகேப், பால்கே விருது பெற்ற முதல் தமிழ் நடிகர் – சிவாஜி கணேசன்(1996)

✓உலக சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் தமிழர் – விஸ்வநாதன் ஆனந்த்

✓தமிழ்நாட்டின் முதல் பெண் நீதிபதி – பத்மினி ஜேசுதுரை

✓தமிழ்நாட்டின் முதல் பெண் மருததுவர் – முத்துலெட்சுமி ரெட்டி

✓தமிழ்நாட்டின் முதல் பெண் தலைமைச் செயலாளர் – லெட்சுமி பிரனேஷ்

✓தமிழ்நாட்டின் முதல் பெண் ஐ.பி.எஸ்.அதிகாரி – திலகவதி

✓தமிழ்நாட்டின் முதல் பெண் காவல்துறை ஆணையர்- லத்திகா சரண்

- ✓தமிழ்நாட்டின் முதல் பெண் கமாண்டோ – காளியம்மாள்
- ✓தமிழ்நாட்டின் முதல் பெண்களுக்கான பேருந்து ஓட்டுநர் – வசந்த குமாரி
- ✓தமிழ்நாட்டின் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற முதல் பெண் - எஸ்.விஜய லெட்சுமி
- ✓தமிழ்நாட்டின்முதல் பெண் டி.ஜி.பி. – லத்திகா சரண்
- ✓தமிழ்நாட்டில் வெளியிடப்பட்ட முதல் ஊமைப்படம் – கீசகவதம் (1916)
- ✓தமிழ்நாட்டில் வெளியிடப்பட்ட முதல்பேசும் படம் – காளிதாஸ்(1931)
- ✓தமிழ்நாட்டில் வெளியிடப்பட்ட முதல் வண்ணப்படம் – அலிபாபாவும் 40 திருடர்களும்
- ✓தமிழ்நாட்டில் வெளியிடப்பட்ட முதல் – பிரதாப முதலியார் சரித்திரம்
- ✓தமிழ்நாட்டில் வெளியிடப்பட்ட முதல் தமிழ் நாளிதழ் – சுதேச மித்திரன்
- ✓தமிழ்நாட்டில் முதல் வானொலி நிலையம் – சென்னை (1930)
- ✓ஆஸ்கர் விருது வென்ற முதல் தமிழர் – ஏ.ஆர்.ரஹ்மான்

தொகுப்பு

செ.உதயசங்கரி மூன்றாமாண்டு தமிழிலக்கியம்

# நெல்லியின் நன்மைகள்

***நீரிழிவு***

நீரிழிவு உடையவர்கள் நெல்லிக்காய் சாற்றில் சிறிது மஞ்சள் மற்றும் தேன் கலந்து குடித்தால் விரைவில் நலம் பெறலாம்.

உடல் எடை

நெல்லிக்காய்ச் சாற்றினைத் தினமும் காலையில் எழுந்து வெறும் வயிற்றில் குடித்தால் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகள் கரைந்து உடல் எடையானது குறையும்

ஆஸ்துமா

நெல்லிக்காய் சாற்றில் சிறிதளவு தேன் கலந்து தினமும்

இரண்டு முறை குடித்து வந்தால் ஆஸ்துமா ஓடிவிடும்.

மலச்சிக்கல்

நெல்லிக்காய் குடலியக்கத்தைச் சீராக வைக்கும். எனவே இதனை தினமும்

மென்றும் சாறாகக் குடித்தும் வந்தால் வயிற்றைச் சுத்தமாக வைக்கும்

இரத்த சுத்திகரிப்பு

நல்ல ஃப்ரஷ்ஷான நெல்லிக்காய் சாற்றில் தேன் கலந்து குடிக்கும் போது இரத்தமானது சுத்தமாகும். சுறுசுறுப்பும் உடல் ஆரோக்கியமும் பெறலாம்.

சிறுநீர் எரிச்சல், உடல் குளிர்ச்சி, அதிகமான இரத்தப்போக்கு, அழகான முகம், இரத்த சோகை, இதய நோய், சரும பிரச்சனைகள், கண்பார்வை, முதுமைத் தோற்றம் முதலான பெரும்பாலான நோய்களுக்கு மிகச் சிறந்த மருத்துவம் தான் நெல்லிக்காய். இதனை ஏழைகளின் ஆப்பிள் என்பார்கள். ஒரு நெல்லிக்காய் 5 ஆப்பிள்கள் சாப்பிடுவதற்குச் சமம் என்பார்கள். இது அவ்வளவு உண்மையல்ல ஆனால் ஆப்பிளைப் போன்று மிகப் பயனுள்ள கனி தான் நெல்லிக்கனி. உவர்ப்புச் சுவையுடைய கனிகள் நம்மிடையே மிகக் குறைவு. விதிவிலக்கு தான் நெல்லிக்காய். ஏனைய சுவையுடைய பழங்கள் நம்மிடம் பருவ மாற்றத்தின் அடிப்படையில் கிடைக்கின்றன. ஆனால் உவர்ப்புச்சுவையுடைய நெல்லிக்காய் கிடைத்தும் நம்மில் பலர் கண்டுகொள்வதில்லை. அதியமானுக்கு நெல்லிக்காய் கொடுத்த ஔவையார் என்று படித்திருக்கிறோம். ஏன் அவ்வளவு கனிகள் இருக்கும்பொழுது ஔவையார் நெல்லிக்கனியை அரசனுக்கு அளிக்க வேண்டும்.

அளவில் சிறிதுடைய அதில் அப்படி என்ன விசேசம்? மன்னனும் மனம் உவந்து பெற்றுக் கொள்கிறான். காரணம் பெரியதாக ஒன்றுமில்லை

சாதாரணமாக நாம் வீட்டில் பேசிக்கொண்டிருக்கும் வசனங்களை ஒரு பிரபல நடிகர் பேசினால் அது எவ்வளவு தூரம் சென்றடைகிறது என்பதை

இன்றைய சினிமாக்கள் மூலம் நாம் அறிவோம். அது போலத்தான். சாதாரண கனி தான். இதனால் மக்களுக்கு பயன் அதிகம். இதை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டுமெனின் மன்னன் வழியாகவே அஃ.து சாத்தியம் என்பதை உணர்ந்த ஔவையார் மலையில் கிடைத்த கனி என்றும், யாருக்கும் கிடைக்காத கனி என்றும், தனக்குக் கிடைத்ததை மன்னனுக்கு அளித்தால் மன்னன் நீண்ட ஆயுள் பெறுவான் என்றும் அறம் போதிக்கின்றார். தான் வாழ்வதைவிட மன்னன் வாழ்தலே மக்களுக்கு நலம் என்று உரைப்பதால் ஒவையாரின் உலக நேயப் பண்பை உணரலாம். ஆனால் அதுவல்ல உணரத்தவருவது நெல்லிக்கனியை உண்டால் நீண்ட ஆயுள் பெறலாம் என்கிற மருத்துவச் சிந்தனையை விட்டுச் செல்கிறார். அச்சிந்தனை உண்மையா பொய்யா என்கிற தர்க்க வாதத்திற்குள் சென்றால் அது வீண். மாறாக நெல்லிக்காய் சாப்படுவது உடலுக்கு நல்லது என்கிற மேலோட்டமான கருத்தை உணருவதே சாலச் சிறந்தது. ஔவையாரின் நோக்கமும் அதுவாக இருக்கலாம். இதுகுறித்து ஆய்வாளர்கள் மேலும் சிந்திக்க..

ச.சங்கீதா

தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## பழுத்த + மொழி = பழமொழி

1)அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டான்

2)அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்

3)அடியாத மாடு படியாது

4)அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொடுக்கும்

5)அத்திப் பூத்தாற் போல்

6)அய்யர் வரும் வரை அமாவாசை காத்திருக்குமா?

7)அரசனை நம்பி புருஷனைக் கைவிடலாமா?

8)அரசன் அன்று கொள்வான் தெய்வம் நின்று கொள்ளும்

9)அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

10)அரைகுறை அறிவு ஆபத்தில் முடியும்

11)அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு

12)அறிவே சிறந்த ஆற்றல்

13)அனுபவமே சிறந்த ஆசான்

14)அன்பே கடவுள்

15)ஆசைக்கு அளவில்லை

16)ஆடத்தெரியாதவன் அரங்கு கோணல் என்றானாம்

17)ஆணுக்கு ஒரு நீதி.. பெண்ணுக்கு ஒரு நீதியா.?

18)ஆபத்துக்காலத்தில் உதவுபவனு உற்ற நண்பன்

19)ஆழம் தெரியாமல் காலை விடாதே

20)ஆபத்துக்குப் பாவம் இல்லலை

21)ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு

22)ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால்

23)ஆற்றில் போட்டாலும் அளந்து போடு

24)ஆனைக்கும் அடி சறுக்கும்

25)ஆனை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே

26)இக்கரைக்கு அக்கரை பச்சை

27)இனம் இனத்தோடு தான் சேரும்

28)ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை

29)உண்மை ஒரு மைல் தூரம் செல்வதற்குள் வதந்தி உலகைச் சுற்றிவிடும்

30)உண்மையான நண்பனை ஆபத்தில் அறி

31)உப்பிட்டவரை உள்ளளவும் நினை

32)உப்பத் திண்ணவன் தண்ணீர் குடித்தாக வேண்டும்

33)உருவத்தைப் பார்த்து எடை போடாதே

34)உழைப்பின்றி ஊதியமில்லை

35)ஊருடன் கூடி வாழ்

36)எரிகிற நெருப்பில் எண்ணெய் விட்டாற் போல

37)எரிகிற வீட்டில் பிடுங்கின மட்டும் லாபம்

38)எருமை வாங்கும் முன் நெய் விலை பேசாதே

39)எல்லாம் நன்மைக்காக பிறகு எதற்காக?

40)எலி வளையானாலும் தனி வளை வேண்டும்

41)ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது

42)ஏழைக்கு ஏற்ற எள்ளுருண்டை

43)ஏழைச் சொல் எடுபடாது

44)ஏற்றம் உண்டானால் இறக்கம் உண்டு

45)ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது

46)ஒய்யாரக் கொண்டையிலே தாழம்பூவாம் உள்ளே இருப்பது ஈரும் பேனாம்

47)ஒரு கல்லில் இரண்டு மாங்காய்

48)ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

49)ஒற்றுமையே பலம்.

- தொடரும்...

தொகுப்பு – ஏ.மேனகா - முதலாமாண்டு

வணிக கணினிப் பயன்பாட்டியல் துறை

## சங்ககால வேந்தர்கள்

சங்க காலத்தில் மூவேந்தர்களும் தத்தமது இடங்களில் சிறப்பாக ஆட்சி புரிந்துள்ளனர். அதே சமயம் ஒற்றுமையின்றி தங்களுக்குள்ளே பகைமையும் கொண்டுள்ளனர். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் என்று யார் யாரை அழைக்கின்றோம் என்று நம்மில் பலருக்குத் தெரியவில்லை. பெருவேந்தர்கள் குறுநில மன்னர்கள் என்று அடுக்கடுக்கான பிரிவுகளில் மன்னர்கள் தமிழகத்தை ஆட்சி புரிந்தனர். முதலில் சேர மன்னர்களைத் தெரிந்து கொள்ளலாம்.

1.உதியன் சேரலாதன்

2.இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

3.பல்யானைச் செல்கெழுகுட்டுவன்

4.கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்

5.களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்

6.ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

7.அந்துவஞ்சேரல் இரும்பொறை

8.செல்வக்கடுங்கோ வாழியாதன்

9.தகடூர் எறிந்தபெருஞ்சேரல் இரும்பொறை

10.இளஞ்சேரல் இரும்பொறை

11.கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை

12.குட்டுவன் கோதை

13.கோக்கோதைமார்பன்

14.சோழிய ஏனாதி திருக்குட்டுவன்

15.மாந்தரம் பொறையன் கடுங்கோ

16.மாரி வெண்கோ

17.யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

18.வஞ்சன்

19.இளங்குட்டுவன்

20.எந்தை

21.கணைக்கால் இரும்பொறை

22.கருவூர்ச் சேரமான் சாத்தன்

23.நம்பி குட்டுவனார்

24.கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை

25.பாலை பாடிய பெருங்கடுங்கோ

26.மருதம் பாடிய இளங்கடுங்கோ

27.முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்

நன்றி

புலவர்கா.கோவிதன் – சங்ககால அரசர்

# கயித்துக் கட்டில்

வெயில்காலம் வந்தால்

வெளியில் வந்து கிடக்கும்..

முதுகினை அழுத்தும் என்று

தெரிந்தும்

விரும்பிக் கிடப்பார் என் தாத்தா

கட்டிலுக்கு அடியில்

தடியும்

சொம்புத் தண்ணியும்

கருப்பு நாயும்

எப்பொழுதும் இருக்கும்..

மசுரு மரம் ஆடுதா பாரு

என்று அனத்திக் கொண்டே

கிடப்பார்..

பாம்புக்கும் பயமில்லை

பேய்க்கும் பயமில்லை..

தாத்தாவால் வீட்டுக்குப்

பயமில்லை..

தாத்தா எழுந்தால் போதும்

சிட்டாய் ஓடும் நாய்..

தாத்தாவைப் பார்த்து தான் தெரிந்து

கொண்டேன்

காவல் தெய்வங்கள்

இப்படித்தான் தோற்றம்

பெற்றனவோ என்று..?

- அகரன்